DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 55/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகராஜ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சேகர் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 28.07.2025.

முதல் விசாரணை

நான் உடுமலைப்பேட்டை ஜெ ஜெ நகரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தை நான் பார்க்கவில்லை 24.11.2022 ம் தேதி நான் குழந்தையை காலையில் பள்ளியில் விட்டு விட்டு சொந்த வேலையாக ஐயப்பா பேக்கரி அருகில் நின்று கொண்டிருநதேன். அப்போது போலிசார் குளோபல்பர்னிச்சர் கடை அருகில் போலிசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். பின்னர் என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் விவரங்களை தெரிந்து கொண்டு சாட்சி கையொப்பம் செய்தேன். மற்றொருவர் யார் கையெழுத்து போட்டார்கள் என்று தெரியாது.

என்னிடம் காட்டப்படும் பார்வை மகரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான்.பார்வை மகசர் அசா.ஆ.2 என குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இன்று தேதி என்ன என்றால் 28.07 ம் தேதி. கையெழுத்து போட்டு ஆவணத்தை படித்து பார்த்திர்களா என்றால் படித்து பார்த்தேன். என்ன எழுதியிருந்தது என்றால் படித்து பார்த்தேன் கையெழுத்து போட்டேன்

தற்போது ஞாபகம் இல்லை. சொன்ன பேப்பரில் கையெழுத்து போடவில்லை என்றால் வெற்று பேப்பரில் கையெழுத்து போட்டிர்கள் என்றாலும் சரியல்ல. வரைபடத்தில் கையெழுத்து போட்டிர்களா என்றால் எழுதியிருநததில் கையெழுத்து போட்டேன் யார் எழுதினார்கள் என்று தெரியாது. பார்வை மகசரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என்றாலும் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.